S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
AUTHORISED SERVICE PROVIDER
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் நவம்பர் 13 * 2025 * மலர் -1 * இதழ்-165* VOL-1 * ISSUE-165 விலை ரூ.3 * பக்கம் -4

### டெல்லி கார் வெடிப்புக்கு மூளையாக இருந்து

# தீவிரவாத இயக்கத்துக்கு ஆள் சேர்த்த பெண் டாக்டர்!

## ★3 ஆண்டுகளாக திட்டமிட்டது அம்பலம்
## ★பரபரப்பு பின்னணி தகவல்!!



லக்னோ, நவ.13

டெல்லி கார் வெடிப்பு சம்பவம் நாட்டையே உலுக்கி போட்டுள்ளது. இதற்கிடையே தான் உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவை சேர்ந்த மருத்துவ கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றிய பெண் டாக்டர் ஷாகின் ஷாஹித் என்பவர் கைது செய்யப்பட்டார். இவர் பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் ஜெய்ஷ்இமுகமது மகளிர் அமைப்பின் இந்தியப் பிரிவுக்கு தலைமை தாங்கி வந்ததாக கூறப்படும் நிலையில் அவரது பின்னணி பற்றி திடுக்கிட வைக்கும் தகவல் வெளியாகி உள்ளது. மேலும் டெல்லி கார் வெடிப்புசம்பவத்தில் இவருக்கும் தொடர்பு இருக்கலாம் என போலீசார் நம்புகின்றனர்.

டெல்லியில் செங்கோட்டை அருகே மெட்ரோ ரெயில் நிலையத்தில் 1வது நுழைவு வாயிலில் நேற்று முன்தினம் மாலையில் சென்றன ஹூண்டாய் ஐ20 கார் வெடித்து சிதறியது. இதில் 13 பேர் இறந்தனர். மேலும் 15க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

இந்த கார் வெடிப்பு சம்பவத்தில் பயங்கரவாத அமைப்பினருக்கு தொடர்பு இருக்கலாம் என்று கருதப்படுகிறது. குறிப்பாக, பாகிஸ்தானில் செயல்பட்டுவரும்ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பினருக்கு தொடர்பு இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்த அமைப்பின் நிறுவனரான மசூத் அசாரை நம் நாடு தேடி வருகிறது. இப்படியான சூழலில் தான் டெல்லியில் கார் வெடிப்பு சம்பவம் அதிர வைத்துள்ளது. டெல்லி போலீசாருடன், என்ஐஏ எனும் தேசிய புலனாய்வு முகமையும் விசாரணையை தொடங்கி உள்ளது. முதற்கட்ட தகவலின்படி வெடித்து சிதறிய ஹூண்டாய் ஐ20 காரை டாக்டராக இருக்கும் உமர் என்பவர்ஓட்டி சென்றதும், கார் வெடித்ததில் அவரும் இறந்ததாகவும் சந்தேகிக்கப்படுகிறது. அதாவது கடந்த மாதம் அக்டோபர் 19ம் தேதி காஷ்மீரின் பன்போரா, நவ்காம் உள்ளிட்ட பகுதிகளில் போலீஸ் மற்றும் நம் பாதுகாப்புப் படையினருக்கு மிரட்டல் விடுத்து ஜெய்ஷ் இ முகமதுபயங்கரவாதஅமைப்பு போஸ்டர்களை ஒட்டியிருந்தது. கண்காணிப்பு கேமராக்களை போலீசார் ஆய்வு செய்ததில், 'ஒயிட் காலர்' பயங்கரவாத முறைக்கு பயங்கரவாதிகள் மாறியிருக்கும் திடுக்கிடும் தகவல் கிடைத்தது. குறிப்பாக டாக்டர்கள் பலரும் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையது பற்றிய தகவல் கிடைத்தது.

தற்போது இந்த ஒயிட்காலர்' பயங்கரவாத குழுவை சேர்ந்த ஷாகின் ஷாஹித் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் உத்தர பிரதேச மாநிலத்தை சேர்ந்தவர். லால்பாக்கில் உள்ள வீடுகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரது சகோதரர் டாக்டர் பர்வேஸ் அன்சாரியிடம் பிடித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையே தான் தற்பாது ஷாகித் ஷாஹித் பற்றிய திடுக்கிட வைக்கும் தகவல் வெளியாகி உள்ளது.

கைதான ஷாகின் ஷாஹித் மருத்துவ கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி வந்தார். கைதான ஷாகின் ஷாகித் முதலில் கான்பூரில் உள்ள கணேஷ் சங்கர் வித்யார்த்தி மருத்துவக் கல்லூரியில் 2006ல் இருந்து பணியாற்றினார். அதன்பிறகு அவர் 2009 மற்றும் 2010 க்கு இடையில்கன்னோஜ் அரசு மருத்துவக் கல்லூரியில் சிறிது காலம் பணியாற்றினார். 2013ல் சொல்லாமல் விடுப்பில் சென்ற நிலையில் மீண்டும் பணிக்கு வரவில்லை. அவரிடம் பல முறை தொடர்பு கொள்ள முயன்றும் அது நடக்கவில்லை. இதனால் கடந்த 2021ல் பணி நீக்கம் செய்யப்பட்டார். ஷாகின் ஷாஹித்தின் தகணவர் பெயர்ஜாபர்ஹயாத். இவர் மகாராஷ்டிராவை சேர்ந்தவர். கடந்த 2015ல் விவாகரத்து பெற்றனர். அடிப்படையில் ஷாகின் ஷாகித் அமைதியானவர் என்று பலரும் கூறுகின்றனர். இதனால் அவர் தற்போது பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்ட வழக்கில் கைதாகி இருப்பதால் பலரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இவர் பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஜெய்ஷ்இ முகமது அமைப்பின் மகளிர் பிரிவுக்கான இந்திய தலைவராக இருந்துள்ளார். இவர் ஜமாத் உல் மொமினின் என்ற பெயரில் ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பின் மகளிர் பிரிவை வலுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்தியாவில் பயங்கரவாத குழுவில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர் செயல்பட்டு வந்துள்ளார். மேலும் இவருக்கு ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பின் நிறுவனராக இருக்கும் மசூத் அசாரின் சகோதரி சாதியா அசாருடன் தொடர்பு உள்ளது. இந்த சாதியா அசார் தான் ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பின் பாகிஸ்தான் மகளிர் பிரிவின் தலைவராக உள்ளார். இவர் தான் நேரடியாக ஷாகின் ஷாகீத்தை நியமனம் செய்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சாதியா அசாரின் கணவர் யுசுப் அசாரும் ஒரு பயங்கரவாதி தான். இவர் கடந்த 1999ம் ஆண்டில் நடந்த கந்தகார் விமான கடத்தல் வழக்கில் தொடர்புடையவர். அவரை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது நம் வீரர்கள் தீர்த்து கட்டினர். பஹவல்பூரில் ஜெய்ஷ்இ முகமது அமைப்பின் தலைமையிடத்தை நம் நாட்டின் ஏவுகணைகள் தாக்கியபோது அவர் கொல்லப்பட்டார். அதுமட்டுமின்றி கைதான ஷாகின் ஷாகித்துக்கு நம் நாட்டின் எல்லையோர பயங்கரவாதிகளுடன் தொடர்பு உள்ளது. சோசியல் மீடியா வழியாக அவர் தொடர்பில் இருந்துள்ளார். ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக ஆட்களை திரட்டும் வகையில் இந்த செயலை அவர் செய்து வந்துள்ளார். இவருக்கும் ஃபரிதாபாத்தில் கைதான டாக்டர் முஜாமில் ஷகீலுக்கும் தொடர்பு உள்ளது.

அதேபோல் முஜாமில் ஷகீலும், கார் வெடிப்பை நிகழ்த்தியதாக கூறப்படும் உமரும் ஒரே மருத்துவமனையில் பணியாற்றினர். இதனால்தான் டெல்லி கார் வெடிப்பில் ஜெய்ஷ் இ முகமதுஅமைப்புக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது.

இவ்வாறு போலீஸார் தெரிவித்தனர்.




டெல்லி குண்டுவெடிப்பை தொடர்ந்து கூடங்குளம் கடற்கரையில் கடலோர காவல் படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருக்கும் காட்சி.

### ராசிபுரம் புதிய பஸ் நிலையம் அருகே

# தனியார் பேருந்து மோதி ஓட்டல் தொழிலாளி பலி!

## வீட்டுக்கு நடந்து சென்றபோது பரிதாபம்!!



ராசிபுரம்,நவ.13–

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த மசக்காளிப்பட்டி பகுதியை சேர்ந்தவர் வேலு.இவரது மகன் ராஜமாணிக்கம்,வாலிபர். இவர் ராசிபுரத்தில் உள்ள ஒரு ஓட்டலில் பல வருடங்களாக வேலை பார்த்து வந்தார். நேற்று இரவு வேலு ஓட்டலில் வேலை செய்துமுடித்து விட்டு வீடு நோக்கி திரும்பினார். புதிய பஸ் நிலையம் அருகே நடந்து சென்ற போது சேலத்தில் இருந்து ராசிபுரம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து எதிர்பாராத விதமாக வேலுவின் மீது மோதியது. இதில் வேலு சம்பவ இடத்திலேயே கீழே விழுந்து மூர்ச்சையானார். உடனே அக்கம் பக்கத்தில் உள்ள பொதுமக்கள் ஓடோடி வந்து வேலுவை மீட்டு ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மருத்துவமனையில் அவரது உடலை பரிசோதித்த மருத்துவர், வாலிபர் வேலு ஏற்கனவே இறந்து விட்டார் என தெரிவித்தார். விபத்து குறித்து ராசிபுரம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிபட்டினம் ஒன்றியம் போதாபுரம் ஜெகதாப் நெரிமேடு ஆகிய பகுதிகளில் மாணாவாரி பயிரான சோளப்பயிர்கள் நன்கு விளைந்திருப்பதை படத்தில் காணலாம்.

### வெள்ளி விலை தொடர்ந்து உயர்வு:

# தங்கம் சவரனுக்கு ரூ.800 குறைந்தது !



சென்னை,நவ.13

தங்கம் விலை நேற்று கிராமுக்கு ரூ.220–ம், சவரனுக்கு ரூ.1,760–ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11,700–க்கும், ஒரு சவரன் ரூ.93,600–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதன் மூலம் தங்கம் விலை மீண்டும் எகிறத் தொடங்கியிருந்தது.தங்கத்தின்மீதுமுதலீட்டாளர்களின் கவனம் திரும்பி இருப்பதால் அதன் விலை உயர ஆரம்பித்திருப்பதாக சொல்லப்பட்டது. கடந்த 2 நாட்களில் மட்டும் தங்கம் விலை கிராமுக்கு ரூ.400–ம், சவரனுக்கு ரூ.3,200ம் உயர்ந்திருந்தது.

இந்நிலையில் இன்றும் தங்கம் விலை சற்று குறைந்துள்ளது. இதன்படி சென்னையில் ஆபரணத்தங்கம் விலை ரூ.100 குறைந்து, ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 600க்கும், ரூ.800 குறைந்து, ஒரு சவரன் ரூ.92 ஆயிரத்து 800க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையும் உயரத் தொடங்கி உள்ளது. நேற்று முன்தினம் கிராமுக்கு ரூ.4–ம், கிலோவுக்கு ரூ.4 ஆயிரமும் அதிகரித்தது. நேற்று கிராமுக்கு ரூ.1–ம், கிலோவுக்கு ரூ.1,000–ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.170–க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது. இந்நிலையில் வெள்ளி விலையும் இன்றும் அதிகரித்துள்ளது. இதன்படி வெள்ளி விலை கிராமுக்கு ரூ.3 உயர்ந்து ஒரு கிராம் ரூ.173–க்கும், ஒரு கிலோ ரூ. 1 லட்சத்து 73 ஆயிரத்திற்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



# யுபிஎஸ்சி தேர்வு முடிவுகள் வெளியானது

யுபிஎஸ்சி 2025 பிரதான தேர்வு முடிவுகள் இணையத்தில் இன்று வெளியாகியுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற யுபிஎஸ்சி தேர்வு முடிவுகள் வெளியான நிலையில் தேர்ச்சி விகிதம் 13.97 சதவீதம் அதிரித்துள்ளது.

அதன்படி, யுபிஎஸ்சி தேர்வு முடிவுகளை http://upsc.gov.in என்ற முகவரியில் பார்த்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஊட்டி, குன்னூரில் சாரல் மழையால் கடுங்குளிர் பகலிலும் ஒளிரும் விளக்குகளுடன் செல்லும் வாகனங்கள்!

ஊட்டி,நவ.13

நீலகிரி மாவட்டத்தில் நவம்பர் மாதம் தொடங்கியதில் இருந்தே பனியும் குளிரும் அதிகரித்து வருகிறது. அதிலும் கடந்த சில நாட்களாக ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கடும் மேகமூட்டம் மற்றும் சாரல் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதன் காரணமாக ஊட்டியில் கடும் குளிர் அதிகரித்து உள்ளது.

அதிகாலை நேரங்களில் பனிமூட்டம் காரணமாக சாலைகளில் செல்லும் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி மெதுவாக இயக்கப்படுகின்றன. இதேபோல மாலையிலும் பனி மூட்டம் வலுப்பெறுவதால் ஊட்டி லவ்டேல், பெர்ன்ஹில், தாவரவியல் பூங்கா, தொட்டபெட்டா உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளிலும் குளிரின் தாக்கம் அதிகரித்து உள்ளது. கடந்த வாரம் வரை பகல் நேரங்களில் வெயில் வாட்டி வதைத்த நிலையில், தற்போது வானம் முழுவதும் மேகமூட்டமாக காணப்படுகிறது. மேலும் பகலில் வெயில் குறைந்து சாரல் மழை பெய்ததால் சுற்றுலா பயணிகள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர். தொடர்ச்சியான சாரல்மழை காரணமாக ஊட்டியின் முக்கிய சுற்றுலா தலங்களான ரோஸ் கார்டன், பூங்கா மற்றும் ஏரி பகுதிகளில்பயணிகளின்வருகைகுறைந்து காணப்படுகிறது.

உள்ளூர் மக்கள் கடும் குளிரால் காலை மாலை நேரங்களில் வீட்டை விட்டு வெளியே வரவே தயக்கம் காட்டுகின்றனர். இதேபோல விடுதிகளில் தங்கியிருக்கும் சுற்றுலா பயணிகள் கடுங்குளிரில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக வெம்மைதரும் ஆடைகள் மற்றும் கையுறைகள் போன்றவற்றுடன் வலம் வருகின்றனர். குன்னூரில் கடந்த ஒரு வாரமாக மழையின் தாக்கம் குறைந்து நீர் பனிப்பொழிவு அதிகரித்து வருகிறது. குன்னூரில் நேற்று இரவு முதல் இன்று காலை வரை பரவலாக மழை தொடர்ந்து பெய்து வருவதால் நடைபயணம் மேற்கொள்வோர் வெளியே வர இயலாமல் வீட்டுக்குள் முடங்கினர்.



எட்டயபுரத்தில் பழமை மாறாமல் பராமரிக்கப்பட்டு வரும் மகாகவி பாரதியார் இல்லத்தினை கனிமொழி எம்.பி., அமைச்சர் கீதாஜீவன் ஆகியோர் பார்வையிட்டனர். அருகில் மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ., மேயர் ஜெகன் ஆகியோர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், உதகை அரசு மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறை ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வட்டார வள மையம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்திய 0 18 வயதுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான இலவச மருத்துவ முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்து பார்வையிட்டார்.

### சேவுகம்பட்டி திமுக பேரூர் சார்பில்

# வாக்காளர் தீவிர திருத்தம் ஆலோசனைக் கூட்டம்!



**வத்தலகுண்டு,நவ.13**

வத்தலகுண்டு அருகே உள்ள சேவுகம்பட்டி திமுக பேரூர் சார்பில் எம். வாடிப்பட்டியில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் SIR ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

இக்கூட்டத்திற்கு சேவுகம்பட்டி நகரச்செயலாளர் தங்கராஜன் தலைமை தாங்கினார்.நகர துணைச் செயலாளர்கள் தனபால், கருப்பையா,மாவட்ட பிரதிநிதி ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் SIR வாக்காளர் சிறப்பு திருத்த பணி என்கின்ற பெயரில் எந்தவொரு உண்மையான வாக்காளர்களின் பெயரும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு விடக்கூடாது.

திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் தங்களை ஈடுபடுத்தி கொண்டு வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்கள் முறையாக சென்று சேருவதற்கும்,

அந்தப் படிவங்களை நிரப்பி வாக்குச்சாவடி அலுவலரிடம் வழங்குவதற்கும் தேவையான உதவிகளை செய்து கொடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள்,வார்டு செயலாளர்கள்,பேரூர் நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள்,வாக்குச்சாவடி பாக முகவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### டாஸ்மாக் கடை துளையிட்டு

# ரூ. 50 ஆயிரம் மதிப்பிலான மது பாட்டில்கள், ரூ.15 ஆயிரம் ரொக்கம் கொள்ளை!



**ஆம்பூர். நவ.13**

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மின்னூர் கிராமத்தில் தமிழக அரசின் டாஸ்மாக் கடை செயல்பட்டு வருகிறது.

நேற்று இரவு கடையின் மேற்பார்வையாளர்கோபிநாத் வழக்கம்போல் கடையை மூடிவிட்டு சென்ற நிலையில், இன்று அதிகாலை மர்ம நபர்கள் டாஸ்மாக் கடையின் இரும்பு கேட்டை துளையிட்டு உள்ளே சென்று அங்கிருந்த ரூபாய் 50 ஆயிரம் மதிப்பிலான மது பாட்டில்களையும், லாக்கரில் வைத்திருந்த ரூபாய் 15 ஆயிரம் ரொக்கம் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

மேலும், கடையில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு சிசிடிவி கேமராக்களையும் உடைத்து சேதப் படுத்தியுள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற ஆம்பூர் காவல் துணை கண்காணிப்பாளர் குமார் தலைமையிலான காவல் துறையினர் கைரேகை நிபுணர்களின் உதவியுடன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

டாஸ்மாக் கடைக்கு வரும் மது பிரியர்களால் இப்பகுதியைச் சர்ந்த குடியிருப்பு வாசிகள் அவதிக்குள்ளாவதாகவும் விவசாய நிலங்களை மது பிரியர்கள் சேதப்படுத்துவதாகவும் இதனால் டாஸ்மாக் கடையை இங்கிருந்து அகற்ற வேண்டும் என கூறி ஏற்கனவே பகுதி மக்கள் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் தற்போது டாஸ்மார்க் கடையில் துளையிட்டு கொள்ளையடித்துள்ள சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ்,மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பாக நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்து இளம் நுகர்வோர்களுக்கு புத்தாக்க பயிற்சியை துவக்கி வைத்தார்கள்.

# இராஜபாளையம் நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக், புகையிலை பொருட்கள் தடுப்பு நடவடிக்கை!



**ராஜபாளையம் நவ 13**

சமீப காலமாக ராஜபாளையம் நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக் மற்றும் புகையிலை பொருட்கள் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதுகுறித்து நகராட்சி ஆணையாளர் நாகராஜன் கூறுகையில் நகர்ப்பகுதியில், அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை மட்டும் பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் (தட்டுகள். கப்புகள், ஸ்ட்ரா. கேரி பேக், ஸ்பூன், பாக்கெட்டுகள்) விற்பனை செய்வதை தடுக்கும் வகையிலும்,

புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதை தடுக்கும் வகையிலும், நகராட்சி துப்புரவு அலுவலர் பா.சக்திவேல் அவர்கள் தலைமையில், இராஜபாளையம்நகராட்சிதுப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்கள் அடங்கிய குழு மூலம் திடீர் சோதனை செய்யப்பட்டது. மேற்படி சோதனையில் அரசால் அரசால் தடைசெய்யப்பட்ட ஒரு முறை மட்டும் பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் 23 கிலோ வணிகர்களால் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்து வந்த வணிகர்களுக்கு ரூ. 3500/அபராதம் விதிக்கப்பட்டது. மேலும்,

பள்ளி வளாகங்களுக்கு அருகில் புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதைதடுக்கும் வகையில், பள்ளி வளாகங்களுக்கு 200 மீட்டருக்கு அருகிலுள்ள கடைகளிலும் மேற்கண்ட குழுவின் மூலம் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், வணிகர்களுக்கு, பள்ளி வளாகங்களுக்கு அருகில். புகையிலை பொருட்களை விற்பனைசெய்யக்கூடாது எனவும், விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் ரூ.10,000/ அபராதம் விதிக்கப்படுவதுடன், விற்பனை செய்யப்படும் வணிக நிறுவனம் பூட்டி சீல் வைக்கப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டு அறிவுறுத்தப்பட்டது. எனவே, இந்நகர்ப்பகுதியில் அரசால் தடை செய்யப்பட்ட, ஒருமுறை மட்டும் பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருட்களை மக்கள் புறக்கணித்து அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் கேட்டுக் கொள்வதாகவும்,மேலும், நகர்ப்பகுதியில் திடீர் ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்

# சக்தி பம்ப்ஸ் – Q2 & H1 FY26 வலுவான வளர்ச்சி!

**சென்னை,நவ 13**

சக்தி பம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனம் FY26 இரண்டாம் காலாண்டு மற்றும் அரை ஆண்டில் உறுதியான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.நீண்ட மழைக் காலம் மற்றும் மூலப்பொருள் விலை உயர்வு போன்ற சவால்கள் இருந்தபோதும், நிறுவனம் வரலாற்றிலேயே மிக உயர்ந்த காலாண்டு வருவாய்களில் ஒன்றை எட்டியுள்ளது. Q2இல் ஒருங்கிணைந்த வருவாய் ரூ. 6,664 மில்லியன், H1இல் ரூ. 12,889 மில்லியன் எனப் பதிவாகி, ஆண்டுத்தோறும் 7.2% வளர்ச்சி கண்டுள்ளது.

செயல்பாடு மற்றும் ஏற்றுமதி முன்னேற்றம்

இக்காலாண்டில் 22,304 சோலார் பம்புகள் நிறுவப்பட்டன; அரை ஆண்டில் மொத்தம் 39,861 நிறுவல்கள் நிறைவேறியுள்ளன. ஏற்றுமதி வருவாய் Q2இல் ரூ. 1,029 மில்லியன், H1 இல்ரூ.2,000மில்லியனாக உயர்ந்துள்ளது. ஹைதி, உகாண்டா, பங்களாதேஷ், நேபாள், மத்திய கிழக்கு மற்றும் அமெரிக்காவில் இருந்து நல்ல தேவை இதற்கு ஆதரவானது.

புதிய பிரிவுகள் மற்றும் எதிர்நோக்கு சோலார் ரூஃப்டாப் மற்றும் ரீட்டெயில் வணிகங்கள் வலுவாக வளர்ந்து வருகின்றன; பண விற்பனை 67% உயர்ந்துள்ளது. 7 நவம்பர் 2025 நிலவரப்படி, ஆர்டர் புக்ரூ.13,000மில்லியனாக உள்ளது.தலைவர்தினேஷ் பாதீடார் கூறுகையில், வலுவான ஆர்டர்கள், திட்டமிட்ட முதலீடுகள் மற்றும் புதிய வணிக வளர்ச்சி FY26 இலக்குகளை அடைய உதவும் என்று தெரிவித்தார்.

### வருகின்ற தேர்தலே அதிமுகவிற்கு கடைசி தேர்தல்:

# கோவையில் ஒரு தொகுதியில் கூட பா.ஜ.க., அ.தி.மு.க. வென்று விடக்கூடாது என்றும் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்!

**கோவை,நவ.13**

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல்திருத்தம்தொடர்பாக திமுக சார்பில் இன்று அனைத்து மாவட்டங்களிலும் முற்போக்கு இயக்கங்கள்சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகிறது.

அதன் ஒரு பகுதியாக SIR செயலை கண்டித்து கோவை சிவானந்தா காலனி பகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தலைமையில்

நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, கம்யூனிஸ்ட், ஆதி இந்திய தேசிய லீக், இந்திய ஒன்றிய முஸ்லீம் லீக் கட்சிகள் உட்பட பல்வேறு கட்சிகள் அமைப்புகளை சார்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் SIRயை கண்டித்தும் பாஜக அரசை கண்டித்தும் கண்டன பதாகைகளை ஏந்தி முழக்கங்கள் எழுப்பப் பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி,

SIR குறித்து முதலில் எதிர்ப்பை பதிவு செய்தவர்நம்முதல்வர்ஸ்டாலின் தான் என்றார். IT, ED போன்றவற்றை கொண்டு வந்து அடக்குமுறையை முன்னெடுத்தார்கள் ஆனால் தோல்வியை தழுவியதால் தற்போது இந்த SIR மூலம் அடக்குமுறையை முன்னெடுப்பதாக குற்றம் சாட்டினார்.

இந்திய தேர்தல் ஆணையம் ஏன் அவசரமாக இதனை முன்னெடுத்தார்கள்? என்று கேள்வி எழுப்பி அவர் இதற்கு

இந்த காலம் போதாது என்று தேர்தல் ஆணையத்திற்கும் தெரியும் அப்படி இருந்தும் அதனை செய்கிறார்கள் என விமர்சித்தா 2026ல் கோவையில் ஒரு தொகுதியில் கூட பாஜக அதிமுக வென்று விட கூடாது என்றார்.

அவினாசி மேம்பாலத்தை திறந்து வைத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்னும் பெரியார் நூலகம் செம்மொழி பூங்கா என பல்வேறு திட்டங்களை அளித்து வருவதாகவும் கோவையில் வரலாறு காண வளர்ச்சியை எம்.எல்.ஏ இல்லாமலேயே முதல்வர் ஆக்கி உள்ளார் என்றார். எனவே நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து SIR முறியடிப்போம் என தெரிவித்தார்.

### பிசானத்தூரில் தனியார் உயிரி மருத்துவக் கழிவு:

# சுத்திகரிப்பு ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து வீடுகளில் கருப்பு கொடி ஏற்றி போராட்டம்!




**கந்தர்வகோட்டை நவ 13**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே பிசானத்தூர் கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் விவசாயத்தை நம்பியே பிழைப்பு நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இந்த கிராமத்தில் உள்ள விவசாய நிலங்கள் அருகே தனியார் உயிரி சுத்திகரிப்பு மருத்துவ கழிவு ஆலை அமைய உள்ளது. இதனால் சுற்றியுள்ள பல கிராமங்களுக்கு காற்று நிலத்தடி நீர் மாசு ஏற்பட்டு அதனால் பொது மக்களுக்கு பல வகையான நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும் அந்த மருத்துவக்கழிவு ஆலைதங்கள் பகுதியில் அமைக்க வேண்டாம் என்று கூறி அதனை கண்டித்து அப்பகுதியை சேர்ந்த கிராம பொதுமக்கள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் முதல்வர் கவனத்திற்கு கொண்டு சேர்க்கும் வகையில் அப்பகுதியை சேர்ந்த கிராம பொதுமக்கள் 17 நாட்களாக தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு பிசானத்தூர் கிராமம் முழுவதும் வீடுகள் மற்றும் வீதிகள் முழுக்க கருப்பு கொடி ஏற்றியும் வாயில் கருப்பு நிற மாஸ்க் அணிந்தும் தனியார் உயிரி சுத்திகரிப்பு ஆலைக்கு எதிராக பிசானத்தூர் கிராம பொதுமக்கள் மற்றும் பிசானத்தூர் உயிரி மருத்துவக் கழிவு ஆலைஎதிர்ப்புபோராட்டகுழுவினருடன் இணைந்து பல்வேறு கோஷங்கள் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஆட்சி மாற்றத்திற்கு இன்னும் 130 நாட்கள் தான் உள்ளது!

### பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பேச்சு!!




**வாணியம்பாடி, நவ.13**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பேருந்து நிலையம் முன்பாக மாவட்ட பாஜக சார்பில் தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம் எனும் தொடர் பயணத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குமாவட்ட தலைவர் எம்.தண்டாயுதபாணி தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி, மாநில செயலாளர் கொ. வெங்கடேசன், மாநில செயற்குழு உறுப்பினர் சி.வாசுதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் வி.வேலு, மாவட்டத் துணைத் தலைவர் எம். ஞானதாஸ், நகர தலைவர் கோபிநாத் ஆகியோர் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராகதமிழக பாரதிய ஜனதா கட்சி மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலையில்உள்ளகிராமங்களில் சாலை வசதி இல்லை, மருத்துவவசதிஇல்லை, மருத்துவர்கள் இல்லை. மாவட்டம் முழுவதும் சாலைகளில் கழிவுநீர் ஆறாக ஓடுகிறது.

இந்த மாவட்டத்தில் பெரும்பான்மை மக்கள் இஸ்லாமியர்கள் உள்ளனர்.

இஸ்லாமியர்கள் நலன் காக்க முத்தலாக் சட்டத்தை பாஜக கொண்டு வந்தது. குடியுரிமை சட்டம் இசுலாமியர்களைநாட்டைவிட்டு வெளியேற்றும் எனதிமுகவினர் குற்றம் சாட்டினர்.

முதல்வர் ஸ்டாலின் நோக்கி நான் கேட்கிறேன், இப்போது சொல்லுங்கள், இஸ்லாமியர் அல்லது கிறிஸ்துவர் என ஒருவர் கூட இந்த நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்களா?. அப்படி ஒருவர் வெளியேறி இருந்தால் நான் எனது பதவியை ராஜினாமா செய்கிறேன். நீங்கள் செய்ய தயாரா.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் நடைபெற்றால் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 9 ஆயிரம் போலி வாக்காளர்கள் இருப்பது வெளியில்தெரியவரும்.

இன்றைக்கு நாட்டிலே திமுக முதலமைச்சரின் தொகுதியிலேயே போலி வாக்காளர்கள் இருப்பது தெரிய வந்தால்அது அவமானமாகிவிடும்.

அதனைத் திசை திருப்பவே இந்த வாக்காளர் சிறப்பு திருத்த திட்டத்தை வேண்டாம் என கூறிக்கொண்டு இருக்கிறார்.

திமுகவினருக்கு தோல்வி பயம், ஆட்சி இழக்கும் பயம் வந்து விட்டது.

அதற்காக நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள், அனைத்து கட்சிகளையும் கூடி ஆலோசனை நடத்துகிறார்கள். அவர்களுக்கான இறுதி கவுண்டவுன் ஆரம்பமாகி விட்டது. இன்னும் 130 நாட்கள்தான் உள்ளது. அதன் பின் நிச்சயம் ஆட்சிமாற்றம் ஏற்படும்.

தமிழகம் முழுவதும் அதற்கான மாற்றம் மக்கள் மனதில் உருவாகி விட்டது.

தமிழ்நாட்டில் 2026ல் நடைபெறவுள்ள சட்டமன்ற பொது தேர்தலில் இரட்டை

இலை சின்னம்' மற்றும் பாஜகவின் தாமரை சின்னம், தேசிய ஜனநாயக கூட்டணியில் எந்தக் கட்சியில் யார் போட்டியிட்டாலும் அவர்களுக்கு வாக்களித்து வெற்றி பெற செய்து ஆட்சி மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்றார்.

கூட்டத்தில் அதிமுக மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி பேசினார்.

இதில் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோவி.சம்பத்குமார், டாக்டர் எஸ். பசுபதி, பாஜகவை மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூராட்சிநிர்வாகிகள், தொண்டர்கள், பல்வேறு அணியைச்சேர்ந்த நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



## சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை கண்டித்து

# மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் நாகப்பட்டினம் அவுரித்திடலில் ஆர்ப்பாட்டம்!

நாகப்பட்டினம்,நவ.13

நாகப்பட்டினம் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை கண்டித்து நாகப்பட்டினம் அவுரித்திடலில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

நாகப்பட்டினம் நகர செயலாளரும், நகர்மன்ற தலைவருமான இரா மாரிமுத்து வரவேற்றார். மாவட்ட செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத் தலைவருமான என் கௌதமன் தலைமை வகித்தார். நாகப்பட்டினம் எம்பி செல்வராஜ், கீழ்வேளூர் தொகுதி எம்எல்ஏ நாகைமாலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்புதீவிரவாக்காளர் பட்டியல் திருத்தம் என்ற பெயரில் வாக்காளர்களின் வாக்குரிமையை பறிக்கும் செயலை கைவிட வேண்டும்.

தமிழர்களின் ஜனநாயக கடமையை பறிக்க முயற்சி செய்யும் தேர்தல் ஆணையத்தை கண்டிப்பது என்பது உள்ளிட்ட கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டம் முடிவில் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தலைவர் என்.கௌதமன் பேசியதாவது: ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு எதிராக நிறைய சட்டங்களை இயற்றியுள்ளது. அதேபோல் சிறுபான்மை இன மக்களை நசுக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு தொடர்ந்து பல சட்டங்களை இயற்றியுள்ளது. இதன் தொடர்ச்சியாக சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பதை ஒன்றிய அரசின் துணையுடன் தேர்தல் ஆணையம் கொண்டுவந்துள்ளது. இந்த திருத்தம் நமது வாக்குரிமையை பறிக்கும் ஒன்றிய அரசின் சதிதிட்டம் என்பதை தமிழக மக்கள் மறந்து விடக்கூடாது. வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுவது.

ஆனால் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பதை ஒன்றிய அரசு முனைப்புடன் செயல்படுத்த காரணம் நமது வாக்குகளை எல்லாம் திருட முயற்சி செய்வதே ஆகும்.

அதனால் தான் முதல்வர் இதை எதிர்க்கின்றார். திமுக கூட்டணி கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிக்கின்றது. ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்படும் அதிமுக அரசு எல்லாவற்றிற்கும் மவுனம் காப்பது போல் இதற்கும் மவுனம் காக்கிறது என்றார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் மாரிமுத்து, திக மாவட்ட செயலாளர் புபேஸ்குப்தா, மதிமுக மாவட்ட செயலாளர் ஸ்ரீதரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் அருள்செல்வன், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் அனஸ், சிவசேனா கட்சி மாநில பொதுச்செயலாளர் சுந்தரவடிவேலன், திமுக மாவட்ட பொருளாளர் லோகநாதன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், செல்வ செங்குட்டுவன், தாமஸ் ஆல்வாஎடிசன், மகாகுமார், சரவணன், வேதராண்யம் நகர செயலாளர் புகழேந்தி, மாவட்ட மீனவரணி துணை செயலாளர் மனோகரன் மற்று பலர் கலந்து கொண்டனர். நாகூர்நகரசெயலாளரும், நகர்மன்றதுணைத்தலைவருமான செந்தில்குமார் நன்றி கூறினார்.



திமுக திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், திண்டுக்கல் மாநகர திமுக சார்பில் SIRக்கு எதிராக அனைத்து கூட்டணி கட்சிகளின் சார்பாக திமுக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த ஆர்ப்பாட்டத்தில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், காங்கிரஸ் மாநகர் மாவட்ட தலைவர் மணிகண்டன், மதிமுக மாவட்ட செயலாளர் செல்வராகவன், விசிக மாநகர மாவட்ட செயலாளர் மைதீன் பாவா மற்றும் அனைத்து கூட்டணி கட்சி தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில்

# 5அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி வட்டத் தலைநகர் ஆர்பாட்டம்!



வந்தவாசி,நவ.13

வந்தவாசியில், தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம் வட்டக்கிளை சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்டம்.வந்தவாசி வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகம் எதிரில்தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் 05 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் வட்டதலைவர்எம்.தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத்தலைவர்பி.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக, வட்டச் செயலாளர் பாலராஜ் விளக்கஉரையாற்றினார். புதிய ஓய்வுதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத் தை அமுல்படுத்த வேண்டும். 70 வயது நிறைவு செய்தவர்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும். தொகுப்பூதியம் பெற்ற ஓய்வூதியர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.7850/ வழங்க வேண்டும் .மருத்துவ காப்பீடு திட்ட குளறுபடிகளை நீக்கி உண்மையான காசில்லா மருத்துவத்தை உறுதிபடுத்திட வேண்டும்.கம்யூடேசன் பிடித்த காலத்தை 11 ஆண்டுகளாக குறைத்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பபப்பட்டன.நிறைவாக வட்ட துணைத் தலைவர் வ.முருகானந்தம் நன்றி கூறினார்.

# போனஸ் கேட்டு பட்டாசு ஆலை வாகனம் சிறைபிடிப்பு!

சிவகாசி, நவ. 13

சிவகாசியில் வருங்கால வைப்பு நிதி முறையாக செலுத்தாததாலும், போனஸ் தொகை வழங்காததாலும் பட்டாசு ஆலை வாகனத்தை தொழிலாளர்கள் சிறைபிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சிவகாசியில் உள்ள ஒரு பட்டாசு ஆலையில் வேலை பார்க்கும் பெரும்பாலான தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி முறையாக செலுத்தவில்லை, போனஸ் தொகை வழங்கவில்லை. இதுகுறித்து தொழிலாளர்கள் ஆலை நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் கண்டுகொள்ளவில்லை. இதனால் ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் தாங் கள் வசிக்கும் செங்கமலப்பட்டி பகுதி வழியாக வந்த பட்டாசு ஆலை நிர்வாகத்தின் வாகனத்தை சிறைபிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுகு றித்து தகவலறிந்து வந்த சிவகாசி கிழக்கு போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தி வாகனத்தை அனுப்பி வைத்தனர்.





## மத்திய அரசையும், தேர்தல் ஆணையத்தை கண்டித்தும்

# திருப்பத்தூரில் தி.மு.க. கூட்டணி கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம்!

திருப்பத்தூர் நவ.13

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (எஸ்ஐஆர்) கொண்டு வந்துள்ள தேர்தல் ஆணையத்தையும், மத்திய அரசையும் கண்டித்து

தமிழக முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வரும் நிலையில்,

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர்பாரதஸ்டேட் வங்கி முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான தேவராஜ் தலைமையில் மத்திய அரசையும், தேர்தல் ஆணையத்தையும் கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி கட்சிகளான கம்யூனிஸ்டு கட்சி, விடுதலை சிறுத்தை கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், காங்கிரஸ், திராவிடர் கழகம், மனித நேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, ஆதித்தமிழர் பேரவை, மனிதநேய ஜனநாயக கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி, உள்ளிட்ட கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் என 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உடன் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன், நகர செயலாளர் ராஜேந்திரன், மற்றும் கூட்டணி கட்சியின் மாவட்ட ஒன்றிய பொறுப்பாளர்கள் என பலர்கலந்து கொண்டனர்.

# பூமி ஸ்கில்எட்: 20,000 இளைஞர்களுக்கு இலவச பயிற்சி!

## 3,471 வேலைவாய்ப்புகள் உருவாக்கம்!!



சென்னை, நவ.13

இந்தியாவின் முன்னணி தன்னார்வ அமைப்பான பூமி, தனது ஸ்கில்எட் வேலைவாய்ப்பு திறன் மேம்பாட்டு திட்டம் மூலம் 2021 முதல் 20,000க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு இலவச தொழில்துறை பயிற்சியை வழங்கியுள்ளது.

இதில் 58% பெண்கள் அடங்குவர். 2024–25 ஆண்டில் மட்டும் 3,471 மாணவர்கள் ஐடி, கோர் என்ஜினியரிங் மற்றும் சுகாதார துறைகளில்வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

பயிற்சி மற்றும் பிளேஸ்மென்ட் அம்சங்கள்

பூமியின் ஸ்கில்எட் திட்டம் கோர் ஜாவா, பைத்தான், டேட்டா சயன்ஸ், AI & ML, வெப் டெவலப்மெண்ட் மற்றும் மென்மையான திறன்களில் இலவச பயிற்சியை வழங்குகிறது. பயிற்சி ஆன்லைன்மற்றும்கலப்பு முறைகளில் நடைபெறுகிறது. Accenture, Tata Electronics, Tech Mahindra, Omega Healthcare போன்ற முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று பிளேஸ்மென்ட் வாய்ப்புகளை வழங்கியுள்ளன. சராசரி ஆண்டு ஊதியம் ₹2.5 லட்சம்; அதிகபட்சம் ₹5 லட்சம் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

பூமி இணை நிறுவனர் டாக்டர் பிரஹலாதன் கே.கே. தெரிவித்ததாவது: “வேகமாக மாறும் தொழில்துறை உலகில், எந்த இளைஞனும் பின்தங்காமல் இருக்க பூமி ஸ்கில்எட் திட்டம் உறுதி செய்கிறது. ரொழில்துறை நிபுணர்களின் வழிகாட்டுதலுடன், இளைஞர்களுக்கு நவீன வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன்களை வழங்குவது எங்களின் நோக்கம்.”



# அண்ணாமலைப் பல்கலை ஆசிரியர்கள் கூட்டமைப்பினர் தொடர் உள்ளிருப்பு போராட்டம்!

சிதம்பரம், நவ.13

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் கூட்டமை ப்பினர் 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்தின் நுழைவு வாயிலில் அமர்ந்து ஆசிரியர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சுப்பிர மணியன் தலைமை வகித்தார். 7 வது ஊதியக்குழு நிலுவைத் தொகைகளை உடனே வழங்க வேண்டும், முனைவர் பட்ட ஊக்கத்தொகைகளை வழங்க வோண்டும், அயற்பணியிட ஆசிரியர்களை உடனே உள்ளெடுப்பு செய்ய வேண்டும், பல்கலைக்கழக துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை அயற்பணியிட ஆசிரியர்களைக் கொண்டு யுஜிசி மற்றும் தமிழக அரசின் விதிமுறைகளின்படி வாரத்திற்கு ஒருவருக்கு வேளைப்பளு 16/14 மணிநேரம் என்ற விகிதத்தில் கணக்கிட்டு திரும்ப அழைக்க வேண்டும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அரசுத்துறைகளைப் போலவே அனைத்து பணப்பயன்களையும் ஓய்வு பெற்ற உடனேயே வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுகண்டனகோ|ங்களை எழுப்பினர். போராட்டத்தில் ஆசிரியர் கூட்டமைப்பு நிர்வாகிகள் பேராசிரியர் முத்துவேலாயுதம், துரை அசோகன், செல்வராஜ். தனசேகரன், செல்லபாலு, ஜான்கிருஸ்டி, புனிதா,காயத்ரி, திருஞானம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அங்கன்வாடி உதவியாளர் பணி தனக்கு மீண்டும் வழங்கி கோரி கலெக்டர் அலுவலகத்தில் பெண் தர்ணா போராட்டம்!

திருப்பத்தூர், நவ.13

திருப்பத்தூர் மாவட்டம் நாட்டறம்பள்ளி தாலுக்கா மல்லபள்ளி ஊராட்சி சுண்ணாம்புகுட்டை பகுதியைச் சேர்ந்தவர் இளவரசன் இவர் ராணுவ வீரர் ஆவார். இவரது மனைவி சங்கீதா என்பவர் ஜோலார்பேட்டை ஒன்றியம் பாச்சல்ஊராட்சிஅசோக்நகர் பகுதியில்உள்ளஅங்கன்வாடி மையத்தில் காலியாக உள்ள உதவியாளர் பணிக்கு விண்ணப்பம் செய்து உள்ளார்.

அதன்பேரில் சங்கீதாவுக்கு திருப்பத்தூர் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிதிட்டபணியின் கீழ் மாவட்டதிட்டஅலுவலர் செந்தில்குமார் கடந்த மாதம் 24 ஆம் தேதி பணிநியமன ஆணையை வழங்கியுள்ளார்.



அந்த ஆணையின் அடிப்படையில்அசோக்நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் பணிக்கு சேர்ந்த சங்கீதா ஐந்து நாட்கள் பணி செய்துள்ளதாகவும் அதன் பிறகு அதே பணிக்கு மாவட்ட திட்ட அலுவலர் செந்தில்குமார் வேறொரு நபரை நியமித்து விட்டதாகவும் தனக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும் என கூறி நேற்று முதல் தனது கணவர் இளவரசனுடன் சங்கீதா கலெக்டர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக வாயில் பகுதியில் அமர்ந்துதர்ணாபோராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். தனக்கு மீண்டும் பணி வழங்கும் வரை எனது போராட்டம் தொடரும் என சங்கீதா தெரிவித்தார்.



## தேர்தல் ஆணையத்தின் ஒருதலைப்பட்ச நடவடிக்கைக்கு எதிராக

# ராமநாதபுரத்தில்தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்!

ராமநாதபுரம்,நவ.13

தேர்தல்ஆணையத்தை கண்டித்து ராமநாதபுரம் மாவட்ட திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் மாவட்ட கலெக்டர் அலுவலக வாசல் முன்பெரும்அளவிலான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு ராமநாதபுரம் திமுக மாவட்ட கழக செயலாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையேற்றார். அவரது தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருமளவில் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட அவைத் தலை வரும்முன்னாள் அமைச்சருமான வ..சத்தியமூர்த்தி, பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி ராமநாதபுரம் நகர மன்றதலைவர் கார்மேகம், துணை தலைவர் பிரவீன் தங்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் மற்றும் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் வாசுதேவன்,

கமுதி நகர செயலாளர் பாலமுருகன், அபிராமம் பேரூர் கழக செயலாளர் ஜாகிர் உசேன் முதுகுளத்தூர் பேரூராட்சி தலைவர் ஷாஜஹான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்



தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு SIR கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 'மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி' கட்சிகளின் சார்பில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை எதிரே நமது தலைமையிலும், ஈஸ்வரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ்., முன்னிலையிலும், கிருஷ்ணகிரி பாராளுமன்ற உறுப்பினர். கே.கோபிநாத், தளி சட்டமன்ற உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட். டி .ராமச்சந்திரன் ஓசூர் மாநகர மேயர்.S.A.சத்யா, மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளின் கண்டன உரையுடன் கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

## புதுக்கோட்டையில் எஸ்ஐஆர்க்கு எதிராக திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் போராட்டம்!



புதுக்கோட்டை,நவ.13

புதுக்கோட்டையில் எஸ்ஐஆர்க்கு எதிராக திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் போராட்டம், வாக் காளர்கள் பட்டியலில் முறைகேடு செய்யக்கூடாது,

வாக்குரிமையை பறிக்கும் எஸ்ஐஆர்ஐ திரும்பப் பெற வேண்டும், பாஜகவின் கைப்பாவையாக தே ர்தல் ஆணையம் செயல்படுவதாக கூறி கைகளில் பதாகைகளை ஏந்தி முழக்கங்கள் எழுப்பி ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டாக்ஸி மார்க்கெட் பகுதியில் எஸ் ஐஆருக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் திமுக வடக்கு மாவட்ட செயலா ளர் செல்ல பாண்டியன் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக, விசிக, மதிமுக, மார்க்சிஸ் ட் கம்யூனிஸ்ட், இந்தியா கம்யூனிஸ்ட், தமிழக வாழ் வுரிமைக் கட்சி, மக்கள் நீதி மய்யம், இந்தியன் யூ னியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட திமுக மற்றும் அத ன் கூட்டணி கட்சிகளை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

மேலும் இந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளுக்கு முறையாக அழைப்பு விடு க்கப்படாததால் இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் யாரும் பங்கேற்கவில்லை.

வாக்காளர்கள் பட்டியலில் முறைகேடு செய்யாதே, எஸ் ஐ ஆர் ஐ கைவிட வேண்டும், பாஜகவின் கைப்பாவையாக இந்திய தேர்தல் ஆணையம் செயல்படுவதாககுற்றம்சாட்டிகைகளில்பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கள்ளக்குறிச்சி மாவட்ட திமுக கூட்டணி சார்பில் எஸ்ஐஆரை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!





கள்ளக்குறிச்சி,நவ.13

தேர்தல் ஆணையம் மேற்கண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (S.I.R.)நடைமுறைக்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக)தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் இன்று கள்ளக்குறிச்சி பேருந்து நிலையம் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னிலை சுப்பராயலு நகர செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

தலைமை உதயசூரியன் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திக்கேயன் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சந்திரசேகரன் மாவட்ட கவுண்சிலர் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் டி. கொளத்தூர் ஊராட்சி திமுக கிளை செயலாளர்கள் ஏழுமலை பழனிசாமி நடராஜன் சிவபாலன் ஞானராஜ் மற்றும் டி.கொளத்தூர் ஏழுமலை ஒன்றிய மாணரணி துணை அமைப்பாளர் திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



கோவை டாடாபாத் சிவானந்த காலனி பகுதியில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில், அனைத்து திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தலைமை தாங்கினார். இதில், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, திமுக மாவட்ட செயலாளர்கள் துரை.செந்தமிழ்ச் செல்வன், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் ஈஸ்வரன், ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமான், மதிமுக அவைத்தலைவர் அர்ஜூன்ராஜ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில துணை செயலாளர் பெரியசாமி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில இளைஞரணி துணை தலைவர் முகமது யூனஸ், ஆதி தமிழர் கட்சி தலைவர் ஜக்கையன், தபெதிக பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன், திமுக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, மனிதநேய ஜனநாயக கட்சி மாநில துணைச்செயலாளர் எம்எச்.அப்பாஸ் ஆகியோர் கண்டன உரையாற்றினர். திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் மீனா ஜெயக்குமார், கூட்டணி கட்சி தலைவர்கள், மற்றும் நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## சிவகாசி சாட்சியாபுரம் ரெயில்வே மேம்பாலம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு திறந்து வைத்தனர்!

சிவகாசி, நவ.13

சிவகாசியில் புதிதாககட்டபட்ட ரயில்வே மேம்பாலத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு நேற்று திறந்து வைத்தனர். சிவகாசி பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மேம்பாலம் நேற்று முதல் செயல்பாட்டுக்கு வந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பாலத்தில் வாகனத்தில் பயணித்து சென்றனர்.



சிவகாசி சாட்சியாபுரம் ரயில்வே கேட்டில் மேம்பாலம் இல்லாததால் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இந்த ரயில்வே கேட் வழியாக தினமும் 4 ரயில்கள் ரயில்கள் கடந்து செல்வதால் அடிக்கடி கேட் மூடப்படும். இதனால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் கேட்டை கடந்துசெல்லமுடியாமல் அவதிப்பட்டனர். அவசர காலங்களில்ஆம்புலன்ஸ் வாகனங்கள் செல்ல முடியாததால் பல உயிரிழப்புகளும் ஏற்பட்டது. பள்ளி நேரங்களில் கேட் மூடப்படுவதால் மாணவர்கள் பள்ளிக்கு சரியான நேரத்தில் செல்ல வழியின்றி தவிக்கும் நிலையும் ஏற்பட்டது. எனவே சாட்சியாபுரம் ரயில் கேட்டில் மேம்பாலம் கட்ட பல ஆண்டுகளாக பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதை தொடர்ந்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ. 61 கோடி மதிப்பில் சாட்சியாபுரம் ரயில்வே கேட்டில்மேம்பாலம்அமைக்க உத்தரவிட்டார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பூமி பூஜை நடத்தப்பட்டு மேம்பாலம் கட்டும் பணி துவங்க பட்டது. 18 மாதங்களில் பணிகள் முடிக்க பட்டு திறப்பு விழாவிற்கு ஏற்பாடு செய்யபட்டது. இந்நிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை 11 மணிக்கு சென்னையில் இருந்து கானொலி வாயிலாக இந்த மேம்பாலத்தை திறந்து வைத்தார். அதை தொடர்ந்து அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு சிவகாசியில் உள்ள பாலத்தை திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர். முன்னதாக நிகழ்ச்சியில் நிதி துறை அமைச்சா் தங்கம் தென்னரசு பேசுகையில், சிவகாசி சாட்சியாபுரம் மேம்பாலம் குறிப்பிட்ட காலத்தில் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்க பட்டுள்ளது. சிவகாசி பகுதியில் பல திட்டங்களை தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். இதே போன்று திருத்தங்க ல்லிலும் மேம்பாலம் அமைக்க தமிழக முதல்வர் ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். மேம்பாலம் அமைப்பதற்கான டெண்டர் விடபப்ட்டுள்ளது. விரைவில் திருத்தங்க ல்லில் மேம்பாலம் அமைக்க அடிக்கல் நாட்டப்படும். அடுத்து சிவகாசி விருதுநகர் சாலை நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்தபடும். சுற்று வட்ட சாலை அமைக்கும் பணிகளும் விரைந்து செல்படுத்த படும். பல திட்டங்களை நிறைவேற்றி வரும் தமிழக முதல்வருக்கு இங்குள்ள மக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் மாவ ட்ட கலெக்டர் சுக புத்ரா, சிவகாசி எம்எல்ஏ அசோகன், மேயர் சங்கீதா இன்பம் மற்றும் அரசு துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திமுக நிர்வாகி மீது நகர திமுக பொருளாளர் புகார்!

### தன் சொத்தை மீட்டு தர கோரிக்கை விடுத்துள்ளார்!!





கிருஷ்ணகிரி,நவ.13

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பகுதியை சேர்ந்தவர் ஜெகதீசன், இவர் திமுக நகர பொருளாளராக உள்ளார்.

இந்த நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு நீதி மன்றம் மூலம் ஏலத்தில் விடப்பட்ட இடத்தை ஜெகதீசன் ஏலத்தில் எடுத்து நீதிமன்றம் மூலம் பத்திரப் பதிவு செய்து கொடுக்கப்பட்டது.

கலைச்செல்வி என்பவர் ஏலத்திற்கு முன்பு 2008ல்பத்திரபதிவுதனது பெயரில் செய்யப்பட்டுள்ளது.

இந்த சொத்தின் மீது கடன் பெற்றாதால் இந்த சொத்து ஏலத்திற்கு வந்தது. அப்போது ஜெகதீசன் 2012 ஆம் ஆண்டு நீதிமன்றம் மூலம் ஏலத்தில் வாங்கிய இந்த சொத்தை

பழைய பத்திரத்தை வைத்து போலி ஆவணங்கள் தயாரித்து கலைச்செல்வி என்பவர் திமுகவை சேர்ந்த காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணியின் கணவர் செந்தில் குமார் என்பவருக்கு பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார்.

இந்த நிலையில் சோஜனம் எடுப்பதற்காக அடி ஆட்களை ஏவி விட்டு அராஜக முறையில் கார் ஸ்டாண்ட் கூரைகளை அடித்து நொறுக்கி பிரித்து எடுத்து சென்றுள்ளாதாக ஜெகதீசன் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதை கேட்ட ஜெகதீசனின் அண்ணா இதய வேந்தன் என்பவரை திமுக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் செந்தில் குமார் கொலை மிரட்டல் விடுத்ததாக புகார் தெரிவித்துள்ளனர்.

ஜெகதீசன் காவேரிப்பட்டினம் திமுக நகர பொருளாளராக உள்ளதாகவும் தனக்கே இந்த நிலைமையா என கூறிய திமுக நிர்வாகி ஜெகதீசன்

காவல் துறை மற்றும் அதிகாரிகள் இதன் மீது உரியநடவடிக்கைஎடுத்து தான் நீதிமன்றம் மூலம் வாங்கிய இடத்தை மீட்டு தர வேண்டும் எனவும், தன் மீது கொலை மிரட்டல் விடுத்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்எனகோரிக்கை விடுத்துள்ளார்.



தூத்துக்குடியில் பிரதான சாலைகளில் உயர் கோபுரம் மின் விளக்குகள் அமைக்கும் பணிகள் தொடர்பாக மேயர் ஜெகன் பெரியசாமி ஆய்வு செய்தார். தொடர்ந்து அந்த இடத்தையும் மட்டக்கடை எஸ்.எஸ்.பிள்ளை மார்க்கெட் சாலையில் நடைபெற்று வரும் புதிய வடிகால் மற்றும் காந்தி சிலை அருகில் நடைபெற்று வரும் ஓய்விடப் பூங்கா பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது என்று தெரிவித்தார். ஆய்வின்போது, மாவட்ட பிரதிநிதி ராஜ்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், வணிக வரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், ஆகியோர் முன்னிலையில் 2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் பணித்திறன் ஆய்வு மற்றும் கடலூர் மண்டல பதிவுத்துறை அலுவலர்கள் பணி சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் பதிவுத்துறை தலைவர் (முத்திரை மற்றும் பதிவு) சுதா மல்யா , கூடுதல் பதிவுத்துறை தலைவர் (சட்டம்) ஜனார்த்தனன் , மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ் , உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங்கடேஷ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு சுற்றுவட்டார பகுதிகளான காடுசெட்டிபட்டி, பஞ்சப்பள்ளி, சூடானூர், மாரண்டஹள்ளி, உள்ளிட்ட கிராமத்தில் தக்காளி செடிகளில் வைரஸ் நோய் தாக்குதல் தொடர்பாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் குழுவினர் நேரில் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது பேராசிரியர் வெண்ணிலா, உதவிபேராசிரியர்கள் தெய்வமணி, செந்தில்குமார், தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆனந்த், தோட்டக்கலை அலுவலர் செல்வன், உதவி தோட்டக்கலை அலுவலர் சங்கர்கணேஷ் மற்றும் விவசாயிகள் உடன் இருந்தனர்.

## புதுக்கோட்டை அருகே ஆலங்குடியில் அனைத்து த்துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் 5 அம்ச கோரிக்கை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்!



புதுக்கோட்டை நவ.13

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் 5அம்ச கோரிக்கையை வலியுறுத்தி அனைத்துத்துறை ஓய்வூதியர்கள் சங்க வட்ட கி ளை சார்பில் வட்டாட் சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் துணைத் தலைவர் கருப் பையா அனைவரையும் வரவேற்று பேசினார் ஆர்ப் பாட்டத்திற்கு ஆலங்குடி வட்டக்கிளை தலைவர் ராஜசேகர் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் வட்டச்செயலாளர் கந்தசாமி, வட்ட பொருளாளர் தங்கராசு மற்றும் பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது.பதுக் கோட்டைமாவ ட்ட இணை செயலாளர் ராஜமாணிக்கம் கோரிக் கைகளை வலியுறுத்தி சிறப்புரையாற்றினார்.

தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தப் படி புதிய ஓய் வூதியத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத்தை மீண்டும் அமுல் படுத்துதல்

அகவை 70 நிறைவு செய்தவர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும் தொகுப்பூதியம் பெறும் அங் கன்வாடி பணியாளர்க ள்,சத்துணவு பணியாளர்கள,கிராம உதவியாளர் களுக்கு குறைந்தபட்சம் ஓய்வூதியம் ரூ.7,850/ வழங்கிடுக

மருத்துவ காப்பீட்டு திட்ட குளறுபடிகளை நீக்கி கா சில்லா மருத்துவத்தை உறுதிபடுத்து கம்யூடேசன் காலத்தை 11ஆண்டுகளாக வைத்திடுக.

01072025 முதல் மத்திய அரசு ஊழியர் களுக்கு வழ ங்கப்பட்ட அகவிலைப்படி உயர்வினை தமிழக அரசு ஊழியர்கள் மற் றும் ஓய்வூதியர்களுக்கும் வழங்கி டு.

என்கிற கோரிக்கையும் வலியுறுத்தியும், 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத் தியும் மற்றும் அகவி லைப்படியும் சேர்த்து வலியுறுத்தப்பட்டது.

ஆர்பாட்டத்தில் அனைத்து ஓய்வூதிய தார ர்களும் கலந்து கொண்டனர். நில அளவைத் துறையை சேர்ந்த ராமதாசு நன்றி கூறினார்.